**அக்கரைப்பற்று பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2019 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து அக்கரைப்பற்று பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணத்திற்கு ஒதுக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்தினை சரியாக கணிப்பீடு செய்வதிலுள்ள சிக்கல்நிலை காரணமாக இறுதிக்கணக்கறிக்கையில் இவை உள்ளடக்கப்படாமல் விடப்பட்டிருந்தது. |
| (ii) | மீளாய்வாண்டில் நவம்பர் மாதம் கிடைக்கப்பெற்றிருந்த முத்திரைக்கட்டண மீளளிப்பு ரூபா 1,798,336 தொகையானது மீளாய்வாண்டிற்கான வருமானமாக காட்டப்படாமல் பொது வைப்புக்கணக்கில் இடப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டுக் குரிய வருமானங்கள் யாவும் வருமானக் கணக்கிக்கு கொண்டுவருதல் வேண்டும். | முத்திரைக் கட்டணத்தொகை கிடைக்கப்பெறும் வருடத்திலேயே வருமானமாக எடுக்கப்பட்டுவருவதுடன் 2017ம் ஆண்டுக்குரிய முத்திரைக் கட்டண மீளளிப்பானது 2019 செப்ரம்பர் மாதத்தில் கிடைக்கப்பெற்றதுடன், 2020ம் ஆண்டில் கிடைக்கவேண்டிய 2018ம் ஆண்டுக்குரிய முத்திரைக் கட்டண மீளளிப்பானது 2019 நவம்பர் மாதத்தில் கிடைக்கப்பெற்ற தனால் 2018ம் ஆண்டுக்குரிய முத்திரைக் கட்டண மீளளிப்புத் தொகையினை கணக்கீட்டுவருடத்தின் வருமானத்தில் உள்ளடக்காமல் 2020ம் ஆண்டின் வருமானத்தில் உள்ளடக்கும் நோக்கில் அத்தொகையினை வைப்புக்கணக்கில் வரவுவைக்கப்பட்டது. |

## 1.4 இணக்கமின்மை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் XIV இன் பிரிவு 217 மற்றும் 218 | P.S. - 46 இற்கமைய காணிகள் கட்டிடங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் காணிகள் கட்டிடங்கள் தொடர்பான சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | விதிகளுக்கு அமைவாக பின்பற்றப்படல் வேண்டும். | காணிகட்டிடம் தொடர்பான பதிவேடு தற்போது பேணப்பட்டு வருகின்றது. எதிர்வரும் கணக்காய்வின்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,108,102 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,388,857 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழேதரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| வாடகைகள் | 2,690,000 | 2,817,244 | 2,784,044 | 51,500 | 1,800,000 | 2,652,811 | 2,634,511 | 18,300 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 400,000 | 439,150 | 439,150 | - | 335,000 | 348,900 | 348,900 | - |
| ஏனைய வருமானம் | 4,875,700 | 10,968,869 | 3,414,068 | 9,923,436 | 3,851,750 | 4,052,203 | 2,473,469 | 2,368,635 |
| | 7,965,700 | 14,225,263 | 6,637,262 | 9,974,936 | 5,986,750 | 7,053,914 | 5,456,880 | 2,386,935 |

**2.2.2 திண்மக்கழிவு சேவைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின்அதிகாரத்திற்குட்பட்ட பகுதியிலுள்ள வீடுகள், கடைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கும் திண்மக் கழிவுகளுக்கான சேவைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவுகளுக்கான சேவைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியிலுள்ள வீடுகள், கடைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கும் திண்மக் கழிவுகளுக்கான சேவைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.2.3 முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016 முதல் 2019 ஆம் ஆண்டு வரை அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வையை கணிப்பிட்டு அவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடுபட்ட நிலுவை தொகைக்கான முத்திரை தீர்வை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறித்த விடயம் தொடர்பில் பதிவாளர் திணைக்களத்துடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு தற்போது 2018 மற்றும் 2019 ம் ஆண்டுகளில் மேலதிகமாக அறவிடப்பட்ட முத்திரை வரித்தொகை கிடைக்கப்பெற்றுள்ளது. ஏனைய வருடங்களுக்கான அறவீடுகளினைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் | உபவிதிகள் தயாரிக்கப்பட்டு அனுமதியினைப் பெற்று நடைமுறைப்படுத்த நடவடிக்கை | உணவகங்கள், சிகையலங்கார நிலையங்கள், விளம்பரங்கள், வெதுப்பகங்கள் மற்றும் அபாயகரமான வியாபாரங்கள் ஆகியவற்றிற்கான உபவிதிகள் புதிதாக தயாரிக்கப்பட்டு சபையின் |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31 வரை 5 விடயங்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட உபவிதிகளிற்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | எடுத்தல் வேண்டும். | அங்கீகாரத்துடன் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வருமான ஒழுங்கமைப்புக்களுக்கான விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட 05 உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | தயாரிக்கப்பட்ட 05 உபவிதிகளின் பிரகாரம் செயல்படுத்தப்படவேண்டிய வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தற்போது தயாரிக்கப்படுகின்றது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல். | நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடையும்பொருட்டு நிறுவன இலக்குகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அலுவலகம், நூலகங்கள், பொதுச்சந்தை மற்றும் பொது விளையாட்டு மைதானம் என்பவை அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 505 பேர்ச் அளவுடைய 07 காணிகளுக்கான உரிமைப் பத்திரங்கள் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை. | உரிமைப் பத்திரங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சில காணிகளுக்கான நில அளவைப்படங்கள் கிடைக்கப்பெற்றதும் அவற்றிற்காகவும் விண்ணப்பங்கள் செய்யப்படுவதுடன், விரைவில் காணிகளுக்கான உரித்தாவணங்கள் பெற்றுக்கொள்ளப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, 07 வெற்றிடங்கள் மற்றும் 03 மேலதிக ஆளணிகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபையில் காணப்படும் பதவி வெற்றிடங்கள் தொடர்பில் அதனை நிவர்த்தி செய்யும்பொருட்டு முதலமைச்சின் செயலாளருக்கு கோரிக்கைக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

### 3.4 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்கு உரிமையான பழுதடைந்த 03 உழவு இயந்திரங்கள் அலுவலக பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | உழவு இயந்திரங்களினை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எமது சபையில் இரண்டு சாரதிகள் மாத்திரம் காணப்படுவதனாலும், அதிகரித்துவரும் வாகனங்களின் பராமரிப்புச்செலவுமற்றும் எரிபொருள் பாவனை என்பவற்றினை இழிவுபடுத்தும் வகையில் எமது பிரதேசசபையில் காணப்படும் வாகனங்கள் சுழற்சி முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையினால் மேற்படி வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு ஏனைய வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. |
| (ஆ) சபையினால் பயன்படுத்தப்படும் மகேந்த்ரா ட்ரக்டரினை சபையின் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமையினை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வேறு நிறுவனத்தினால் எமது பிரதேசசபைக்கு வழங்கப்பட்ட இவ்உழவு இயந்திரத்திற்கான ஆவணங்கள் வழங்கப்பட் டிருக்கவில்லை. தற்போது உரிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |